**CC.419/2017.**
**P.W.2**

| | | |
|---|---|---|
| மரிய தஸ்நேவிஸ் திலகர் | த/பெ. சேசு மிக்கேல் | 13.04.2022 |

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் தற்போது பாளையங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் சிந்தாமணி ஆகும். நான் சம்பவ சமயத்தில் மகிழடியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன், கூடுதலாக திருக்குறுங்குடி பகுதி II கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பில் இருந்தேன். சம்பவ இடம் எந்த புல எண் மற்றும் கிராமத்தில் உள்ளது என்பது குறித்து வனச்சரகருக்கு அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை. நான் எந்த கிராமத்தில் பணியாற்றி வருகிறேனோ அந்த கிராமத்தில்தான் தங்கியிருக்க வேண்டும் என்றால் சரிதான். மகிழடி கிராமத்தில் இருந்து சம்பவ இடம் எவ்வுளவு தொலைவு இருக்கும் என்றால் 4 கி.மீ இருக்கும். சம்பவம் நடந்த இடம் வனச்சரகத்திற்கு பார்த்தியப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள பட்டா இடம் என்றால் சரிதான். சம்பவ இடம் பூமணி என்பவர் பெயரில் பட்டா பதிவாகியிருந்தது. சம்பவ இடம் அருகில் ராஜமணி என்பவருக்கு தனியாக பட்டா இடம் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் ராஜமணி இடத்திற்கு நான் சென்றேன் என்று கூறியிருந்தால் அது தவறானதுதான். சம்பவ இடத்தில் இயற்கையாக உள்ள நீர் ஊற்று சம்பவ இடத்தின் எந்த திசையில் உள்ளது என்றால் சம்பவ இடத்தின் தென்மேற்கு திசையில் உள்ளது, அதன் அமைப்பு குறித்து குறிப்பிட்டு கூற இயலாது. நான் போகும்போது சம்பவ இடத்தில் நாங்கள் செல்லும்போது சேட்டையன் (எ) இசக்கிமுத்து, சேகர் ஆகியோர் இருந்தார்கள், அதில் ஒருவர் ஓடிவிட்டார். சம்பவ இடத்திற்கு பத்து பேர் இரண்டு ஜீப்பில் சென்றோம் என்றால் சரிதான். பூமணி என்பவரின் பட்டா இடத்தின் விஸ்திரனம் தற்போது எனக்கு ஞாபகமில்லை. பூமணி இடத்திற்கு வடக்கு பக்கம் வனத்துறைக்கு சொந்தமான இடம் இருந்தது. பூமணி இடத்தை சுற்றி வேலி இருந்ததா என்றால் பூமணி இடத்தை சுற்றி வேலி இல்லை, வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் வேலி இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு அதிகாலை 6.00 மணிக்கு சென்றுவிட்டேன் என்றால் 6 முதல் 6.30 மணிக்குள் சென்றிருப்பேன். சம்பவ இடத்தில் மாமரம், வாழை மற்றும் காட்டு மரங்கள் பயிரிடப்பட்டிருந்தது. ஆஜர் 1ம் எதிரியிடமிருந்து அவர் பருவம் செய்த பயிர்களை வாங்கி சென்றது தொடர்பாக வனச்சரகருக்கும் 1ம் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்த விபரம் எனக்கு தெரியுமா

L PRAKASH
Digitally signed by L PRAKASH
Date: 2022.04.13 18:14:00 +0530

என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் வைத்து நான் உடும்பை பார்க்கவில்லை. நீரூற்றில் உடும்பு நீந்தி சென்ற தடம் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் உடும்பின் உடல் உறுப்புகள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சமையல் யார் செய்தார்கள் எதை வைத்து செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் பாத்திரம் மற்றும் அடுப்பு இருந்ததை நான் பார்த்தேன். சம்பவ இடத்தில் நான் பார்த்ததாக கூறும் பாத்திரங்கள் 1-ம் எதிரி கஞ்சி வைத்து குடிப்பதற்காக வைத்திருந்த பாத்திரங்கள் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பாத்திரத்தின் அளவு மற்றும் அதில் எதாவது எழுதப்பட்டிருந்ததா என்பதை கூறமுடியுமா என்றால் பாத்திரத்தின் அளவு சுமார் 1 அடி விட்டம் மற்றும் ஒரு ஜான் உயரம் இருக்கும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. பாத்திரங்கள் அடுப்பில் தான் இருந்தது என்றால் சரியல்ல, சமைத்துவிட்டு பாத்திரங்கள் கழுவாமல் கீழே வைக்கப்பட்டிருந்தது. நான் 23.06.2016 தேதி திருக்குறுங்குடி பகுதி II கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் சம்பவ இடம் குறித்து அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறியதுபோல் 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடமிருந்து பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் உரிமையாளரிடம் நான் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. நான் வனச்சரகருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

L PRAKASH

Digitally signed by L PRAKASH
Date: 2022.04.13 18:14:09 +0530